வருகிறார் என்பது அமைச்சருக்கும் தெரியும். ஆகவே அவர்மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-10)

மாண்புமிகு திரு. ஆர் எம் வீரப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மருதமலை என்பது கோவைக்கு அருகாமையில் இருக்கிறது. கோவை நகரத்தில் சுற்றுலா வளர்ச்சி கழகம் அதிக அறைகள் அடங்கிய விடுதிகளைக்கட்டுவதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. சுற்றுலா விடுதிகள் அமைப்பதன் அடிப்படை நோக்கமே அங்கே வருகிற சுற்றுலாப் பயணிகள் தங்குகிற முறையையும், அளவையும், மற்ற பிரச்னைகளையும் மனதில் கொண்டு இப்படிப்பட்ட விடுதிகள் கட்டுகின்ற திட்டம் நிறைவேற்றப்படுகிறது. மருதமலை என்பது யாத்ரீகர்கள் வருகின்ற ஸ்தலமாக இருக்கிறது. அங்கே பக்தர்கள் தங்குகிற அமைப்புகளைக் கட்டுவதில் சுற்றுலா வளர்ச்சி கழகம் ஈடுபட முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த யோசனை மீது அறநிலைய துறையின் சார்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அது ஆய்வில் இருக்கிறது. இன்னொன்றையும் தெரிவித்தார்கள். அந்தக் கோவிலுக்குப் பக்கத்தில் யாரோ ஒரு சாமியார் துஷ்பிரயோகம் செய்வது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று சொன்னார்கள். அமைச்சருக்குத் தெரிந்து நடக்கவில்லை. ஆனால் மருத மலைக்குப் பக்கத்தில் வனத்துறைக்குச் சொந்தமான ஒரு இடத்தை ஆக்கிரமித்துக்கொண்டு அங்கே ஒருவர் தனியாக பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார் என்பது அரசின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதுமாத்திரமல்ல, சமூக விரோத சக்திகள் அதைப் பயன்படுத்திக் கொண்டிருக்கி றார்கள் என்ற தகவலும் வந்திருக்கிறது. அது தீவிர பரிசிலனைக் குரியதாக இருக்கிறது. அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.

கிளைச் சிறைகள் நிர்வாகம்.

* வினா எண் 756—திரு. யா. சை. மு. யூசுப்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை கிளைச் சிறைச்சாலைகள் உள்ளன?

(ஆ) கிளைச் சிறைச்சாலைகளின் பராமரிப்பினை சிறைத் துறைக்கு மாற்ற அரசு தீர்மானித்துள்ளதா?

1979 ஏப்ரல் 21]

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்):

(அ) 119. (ஆ) ஆம். சார்புச் சிறைகளின் நிர்வாகப் பொறுப்பை வருவாய்த் துறையில் இருந்து படிப்படியாக சிறைத் துறைக்கு மாற்றுவதற்கு கொள்கை ரீதியாக அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. சென்ற ஆண்டு செங்கற்பட்டு சார்பு சிறைகளை எடுத்துக்கொண்டு அடுத்த ஆண்டு தென் ஆற்காடு மாவட்டத்தில் உள்ள சார்புச் சிறைகளை எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. யா. சை. மு. யூசுப்: பேரவைத் தலைவர் அவர்களே இன்றைக்கு அநேகமாக அங்குள்ள சிறைச்சாலைகளில் அண்டர் டிரையல் கைதிகளை அடைத்து விடுகிறார்கள். அந்தச் சிறைச் சாலைகளில் குறைந்தபட்ச தேவைகள் கூட இல்லை. அவர்கள் குற்றவாளி கைதிகள் போல் பல கஷ்டங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் நிலையைக் காண்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்தில் உள்ள கிளைச் சிறைச்சாலைகளை இந்த முறையில் சிறைச் சாலை துறை எடுத்துக் கொண்டால் 22 ஆண்டுகள் பிடிக்கும். அந்த அண்டர் டிரையல் கைதிகளுக்கு தேவையான வசதிகளை உடனடியாகச் செய்து கொடுப்பதோடு அந்த சிறைச் சாலைகளை சிறைத் துறைக்கு மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்): ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சார்பு சிறைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. நிதி நிலைமையைப் பார்த்து அது செய்யப்படும். அந்தச் சிறைச் சாலைக் கைதிகளுக்கு என்ன என்ன தேவைகள் உடனடியாகச் செய்ய வேண்டுமோ அவற்றைச் செய்து வருகிறோம். சிறைத் துறைக்கு மாற்றுவது என்பது காலதாமதம் ஆகும். மற்ற வசதிகள், குறிப்பாக பிளஷ் அவுட் வசதிகள் உடனடியாக இந்த அரசு செய்து வருகிறது.

திரு. சி. கோவிந்தராசன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் யூசுப் அவர்கள் கூறியது போல அண்டர் டிரையல் கைதிகளை அங்கே சப் ஜெயிலில் வைக்கிறார்கள். அவர்களுக்கு வேண்டிய குறைந்தபட்ச தேவைகள் மட்டுமல்ல, 8, அல்லது 10 பேர்கள் இருக்க வேண்டிய அந்த இடத்தில் 50 பேர்களை அடைக்கிறார்கள். அங்கே காற்று வசதி கிடையாது, ஜன்னல் வசதி கிடையாது. சுகாதார வசதியே இல்லை. மூட்டைப் பூச்சி வேறு கடிக்கிறது. அவைகளையெல்லாம் செய்வதற்கு ஜெயில் சீர்திருத்த குழு ஏதாவது பரிந்துரையை அரசுக்கு அனுப்பி இருக்கிறதா? அந்த அடிப்படையில் அந்த ஜெயில்களில் சீர்திருத்தம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1979 ஏப்ரல் 21

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : சீர்திருத்தம் செய்வதற்காக ஒரு குழு அமைக்கப் பட்டு அது ஒரு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்திருக்கிறது. இந்தக் குழு சிறைச்சாலைகளில் உள்ள குறைகளையும் ஆராய்ந்திருக்கும் என்று நம்புகிறேன். கூடுமான வரை பல வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சில நேரங்களில் தவிர்க்க முடியாத நிலையில் பல பேர்களைக் கைது செய்யும்போது, சில சிக்கல்கள் ஏற்படுகின்றன. அப்போது உடனடியாகக் கைது செய்பவர்களை மத்திய சிறைச்சாலைக்கு அனுப்பிவிடுகிறார்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கிளைச் சிறைச் சாலைகளில் லாட்ரீன் அமைத்துக் கொடுக்க செயற்குறிப்பு இருப்பதாக சொன்னார்கள். இதன்படி நிறைவேற்றவேண்டும் என்றால் 10, 15 ஆண்டுகள் ஆகும். ஆகவே சீக்கிரமாக இந்த லாட்ரீன்களை ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ? மேலும் கைதிகளிடம் சீலைப் பேன் என்பது மிகவும் மோசமாக இருக்கிறது. இது எல்லா கைதிகளிடமும் பரவி விடுகிறது. இதையும் உடனடியாக போக்கு வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

திரு. எம். ஏ. ஜெயவேலு (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பெரும்பாலும் உள்ள கிளைச் சிறைச்சாலைகளில் இந்த நவீன வசதிகள் பிளஷ் அவுட் வசதி ஏற்படுத்தப்பட்டிருக் கிறது, மேலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற சீலைப்பேனைப்பற்றி அரசுக்குத் தகவல்வரவில்லை. இருந்தாலும் அதுபற்றி ஆராயும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

Vellore Court buildings.

* Q. No. 757 Thiru R. MARGABANDU ; Will the Hon. the Minister for Law be pleased to state the present stage of the proposal to shift the Court buildings from Vellore Town Fort to Sathuvacheri Housing area ?

திரு. எம். ஏ. ஜெயவேலு: (அமைச்சரின் பேரவைச் செயலர்): இச்செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

Thiru P. CHANDRAN : I want to know from the Hon. Parliamentary Secretary to the Hon. Minister for Law if the Government would come forward to construct Chambers for the Advocates practising there, as we do in the High Court, since Sathuvacheri is far away from the Vellore Town Fort.

திரு. எம். ஏ. ஜெயவேலு : (அமைச்சரின் பேரவைச் செயலர்) : தலைவர் அவர்களே, நமது உயர்நீதிமன்றம் இந்த மாவட்ட நீதிமன்றத்தை சத்துவாச்சேரி பகுதியில் ஏற்படுத்த